விலை சதம் 10

# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

**அறிவிப்பு**

காந்திய- சர்வோதய இலட்சியங்களுக்கமைய கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை.

விபரங்களுக்கு:-
காந்தி நிலையம்
உருத்திரபுரம்.

மலர் 11 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 104) 1974 பெப்ரவரி, மார்ச்சு | இதழ் 5, 6

# சுயராஜ்யம் என்றால் என்ன?



சுயராஜ்யம் என்பதற்கு நான் கொள்ளும் பொருள் இந்நாட்டில் பிறந்தும், இங்கே குடியேறியும் உள்ள வயது வந்த ஆடவரும், பெண்டிரும் தம் உடல் உழைப்பினால் அரசாங்கத்திற்கு உதவி செய்தும், வாக்காளர் பெரும்பாலோரின் சம்மதத்தின் மூலம் அமைக்கப்படுவது தான். இந்த நோக்கத்தை, அதிகாரத்தை ஒரு சிலர் கைப்பற்றிக் கொள்வதனால் அடைந்து விட முடியாது. அதிகாரம் துஷ்ப்பிரயோகம் செய்யப்படுகையில் அதை எதிர்த்து நிற்பதற்கு வேண்டிய தகுதியை எல்லாரும் பெறுவதினாலேயே வரும் என்பதை நிரூபிப்பதன் மூலம் எய்தலாம் என்று எதிர்பார்க்கிறேன். இதையே வேறு வார்த்தைகளில் சொன்னால் ஆட்சியை ஒழுங்கு படுத்தவும், அடக்கிக் கொண்டு போகவும் தமக்குள்ள சக்தியை உணருமாறு பொது மக்களுக்கு போதிப்பதனாலேயே சுயராஜ்யம் பெறப்பட வேண்டும்.

சுயராஜ்யத்தினால் நாம் நாகரிகம் அடையுமாறும், நாம் தூய்மையுற்று நம் நாகரிகத்தை நிலைக்கச் செய்யவும் முடியாதென்றால் அந்த சுயராஜ்யம் சல்லிக்காசு பெறாது நமது நாகரிகத்தின் பொது வாழ்விலும், சொந்த வாழ்க்கையிலும், எல்லா விவகாரங்களிலுமே நன்னடைத்தைக்கு தலையாய இடம் அளிப்பது தான் சுயராஜ்யத்திற்குப் பொருள்.

சுய ஆட்சி என்றால் அரசாங்கத்திடமிருந்து- அது அந்நியருடையதோ நம்முடையதோ அதன் கட்டுத் திட்டங்களிலிருந்து விடுபடுவதற்குச் செய்யப்படும். தொடர்ந்த முயற்சி ஆகும். சுயராஜ்ய அரசாங்கத்தின் கீழ் வாழும் மக்கள் தம் வாழ்க்கையின் ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் அரசாங்கத்தின் தயவை நாடுவதாய் இருந்தால் அந்த சுயராஜ்ய ஆட்சி மிக மோசமாகத்தானிருக்கும்.

மக்களின் மிக மிக ஏழைகளுடன் முழுவதும் ஒன்றுவதும் அவர்களுடையதை விட சிறிதும் உயர்ந்ததல்லாத வாழ்க்கை நடத்துவதில் தீவிர விருப்பமும், அவர்களின் தரத்தை எட்டுவதன் அவசியத்தை ஓயாது உணர்ந்தும், இயன்றளவு முயன்றும்வருதலும் ஒருவனுக்கு தன்னை ஒரு ஜனநாயகவாதி என்று சொல்லிக் கொள்ள உரிமையளிக்குமானால் நான் என்னை ஜனநாயகவாதி என்பேன்.

மக்கள் கைக்கு அரசியல் அதிகாரம் வரும் போது அவர்களின் சுதந்திரத்தில் அரசாங்கத்தின் தலையீடு கூடிய வரையில் குறையும். இதையே வேறு வகையில் சொன்னால் அரசாங்கத்தின் தலையீடு அதிகமில்லாமல், தன் காரியங்களை சுமூகமாகவும், சிறப்பாகவும் நடத்திக் கொண்டு போகும் நாடு உண்மையில் ஜனநாயகம் நடப்பதாய்ச் சொல்வது பெயரளவில் தான் அவ்வாறு இருக்கும்.

ஜனநாயகத்தின் சாரமே நாட்டில் வாழும் பல்வேறு இனத்தாருக்கும் சாதியாருக்கும் ஒவ்வொரு மனிதனும் பிரதிநிதியாக இருப்பதில் தான் இருக்கிறது. சிறப்பான இனங்களுக்கும் சாதிகளுக்கும் தனிப் பிரதிநிதித்துவம் அளிக்க அதில் இடமிருக்க வேண்டும். ஆனால் அத்தகைய பிரதிநிதித்துவமே அது ஜனநாயகம் என்பதற்கு அத்தாட்சி ஆகாது. குறைபாடுள்ளது என்பதற்கே இது அறிகுறி.

உண்மையான ஜனநாயகம் அல்லது பொதுமக்களின் சுயராஜ்யம் பொய்யானதும் பலவந்தமானதுமான முறைகளினால் ஒருபோதும் அமையாது. இதற்கான எளிய காரணம்: அவைகளை உபயோகித்தலென்பதற்கு எதிரிகளையெல்லாம் அடக்கி ஒழித்தல் என்று அர்த்தமாவது தான். அவ்வாறு செய்கையில் தனி மனிதன் சுதந்திரத்தைக் காக்க முடியாது. கலப்பில்லாத அகிம்சைஆட்சி செலுத்தும் போது தான் மனிதனின் சுதந்திரம் பாதுகாக்கப் படும்.

— மகாத்மாகாந்தி

காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]
தொலை பேசி; 254
கிளிநொச்சி
காந்தி ஆண்டு 104
1974 பெப்,மார்ச்.

# சுறுசுறுப்பும் ஒறுப்பனவும்

சர்வோதயத்திற்கு மக்கள் உயர்வு என்ற ஒரு நிலையான கொள்கையைத் தவிர அதற்குக் கருங்கல் அடிப்படையான கோட்பாட்டுச் சித்தாந்தங்கள் கிடையா. வளர்ந்து வரும் வரலாறு, விஞ்ஞான முறைச் சிந்தனைத் தெளிவு, தேசிய அனுபவங்கள், உயர்வு உள்ளும் பல்குலத்துச் சான்றோரின் ஆழ்ந்த அனுபவ முடிவுகள், எல்லாம் சர்வோதயத்திற்கு நாதவிந்து.

எனவே, சிறுபான்மை பெரும்பான்மை, கொள்கை மாறுபட்டாரிடத்தும், மக்கள் ஆக்கம் கருதி உழைப்பாரிடத்துக் காணப்படும் அனுபவச் சிந்தனை முத்துக்களை, கொள்கை வாழ்வின் அனுபூதிச் செல்வங்களை, சர்வோதய நெறியினர் தவறாது கண்டறிந்து கடைப்பிடித்தல் வேண்டும். யார் வாய்க் கேட்பினும் மெய்ப் பொருள் கடைப் பிடித்தல் சர்வோதயம்.

எண்பது கோடி மக்கள் ஒரு சமூகமாக அமைந்த ஓர் இனத்தவரின் மாபெருந் தலைவரான மாசேதுங் என்பாரின் ''செந்நூல்'' என்பதிலிருந்தும் சில அறிவுரைகளை இங்கு தருகின்றோம். கீழ்க்காணும் இப் பகுதிகள் நேர் மொழி பெயர்ப்புகளல்ல. பொருள் அளவில் மாற்றங்கள் செய்யப்பட வில்லை. எம் நாட்டுச் சூழ்நிலைக்கு இயையாத பகுதிகள் விடப்பட்டுள்ளன.

''எங்கள் மக்களும், பணிமுறையினரும் எங்கள் நாடு ஒரு பெரிய சமூகவுடைமை நாடு ஆயின் பொருளாதார முறையில் பின் தங்கியது வறுமையானது என்பதையும் இது ஒரு முரண்பாடு என்பதையும் என்றும் மனதில் கருதுதல் வேண்டும். சைனவை செல்வமுடையதாக்கிப் பலமுடைய தாக்க பல்லாண்டு அயரா முயற்சி எடுக்க வேண்டும்; இதற்குக் கடுமையான சிக்கனத்தைக் கைக்கொள்ள வேண்டும். வீண்விரயத்தை ஒழித்துக் கட்ட வேண்டும். இதுவே எங்கள் நாட்டை சுறுசுறுப்புடனும் ஒறுப்பனவுடனும் நிர்மாணிக்கும் முயற்சியாகும். '' (1957 மாவோ)

இலங்கை இன்னும் சமூகவுடமை நாடாகவில்லை; வறுமையும் கொடியது. இந்நிலையில் எங்கள் ஆடம்பர வாழ்வால் வரும் வீண் விரயத்தை நாம் எவ்வளவில் கட்டுப்படுத்த வேண்டும். எங்கள், நிருவாகத்துறை பணித்துறைகளில் சுறுசுறுப்பு என்பதே அரிது.

'' தொழிற்சாலைகள் கடைகள் பொதுத்துறை கூட்டுறவுத் தாபனங்கள் ஆகியவற்றை நடாத்துவதில் சுறுசுறுப்பும் ஒறுப்பனவும் கடைப்பிடிக்கப் படல் வேண்டும். சகல துறைகளிலும், சகல முயற்சிகளிலும் சுறு சுறுப்பும் ஒறுப்பனவும் கடைப்பிடிக்கப் பட வேண்டும்.'' (1955 மாவோ)

இந்தச் சுறு சுறுப்பையே வள்ளுவர் 'ஆள்வினையுடைமை' என்கின்றார். 'கைதூவாமை' என்பதும் இதுவே. தாழாது உஞற்றுதல் என்பதும் இதுவே. ஒறுப்பனவு என்பது, போகத்தை வேண்டாது நீக்குதல். '' உடம்பினை ஒறுத்து நோற்பார் உலகெலாம் வியப்ப வாழ்வர் '' என்று கந்தபுராணம் கூறும்.

'' சிக்கனக் கோட்பாடே சமூகவுடைமைப் பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்று சைன பெரிய நாடு ஆயின் அது இன்றும் வறுமையாயுள்ளது '' அதனை வளமாக்கப் பல்லாண்டுகள் வேண்டும். அதன் பிறகும் சுறுசுறுப்பும் ஒறுப்பனவும் நம் பிரமாணங்களாயமைய வேண்டும். ஆயின் அடுத்துவரும் ஆண்டுகளில், தொடர்ந்து வரும் ஐந்தாண்டுத் திட்டங்களை நடைமுறைப் படுத்தும் பொழுது சுறுசுறுப்பு ஒறுப்பனவுக் கோட்பாடுகளையும் சிக்கனத்தையும் நாம் சிறப்பாக மனதில் கொள்ள வேண்டும்.'' (1955 மாவோ)

இவ்விடத்தில் ஒறுப்பனவு என்பதைப்பற்றிச் சிறிது விளக்குதல் நலம். ஒறுப்பனவு என்பது ஒருவர் தம் தேவைகளைப் பரநலம் கருதிச் சுருக்குதலாகும். உண்மையில் தவம் எனபதும் இதுவே. இந்த ஒறுத்த வாழ்வினுல் தான் மூலதனம் பெருகும். நாட்டில் சமத்துவம் பெருகும். இதை உணர்ந்தே குமரகுருபரர் சொல்கிறுர்;

''பெற்ற சிறுகப், பெறுத பெரிதுள்ளும் சிற்றுயிர்க்காக்கம் அரிது ..''
(தான் பெற்றதைக் குறைவாக எண்ணி பெருதவை மிகப்பல என்று அங்கலாய்க்கும் உயிர்களுக்கு ஆக்கம் — வளர்ச்சி கிடையாது)

'' எத் துறையில் நாம் இருப்பினும் நாம் எங்கள் மக்கள் வலுவையும் பொருள் வளத்தையும் பேணிக் காக்க வேண்டும். குறுகிய நோக்கங் கொண்டு ஆடம்பரத்திலும் வழிபாட்டிலும் ஈடு படக் கூடாது. வருங்காலத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும். '' (1945 மாவோ)

''சிறு நகரங்களில் விவசாயம் கைத்தொழில் இரண்டையும் நிலைநாட்டித் துரிதப்படுத்துவதற்கும் விருத்தி செய்வதற்கும், மானிய முறையை ஒழிக்க வேண்டும். இப்பொழுது பயன் தரும் உற்பத்திப் பணிகளைப் பேண வேண்டும். இவற்றை அழிப்பாரைத் தண்டிக்க வேண்டும். வீணுக்குவோரைத் தண்டிக்க வேண்டும். மிதமிஞ்சி உண்பதனை ஒழிக்க வேண்டும். செட்டாயிருப்பதிலும் சிக்கனத்திலும் கவனம் செலுத்த வேணடும். '' (1945 மாவோ)

[3ஆம் பக்கம் பார்க்க]

# சர்வோதய விழா

மகாபாரதம், இராமாயணம் ஆகியவை மக்கள் வாழ்விற்குப் பயன் படுவது போல, மகாத்மா காந்தி அடிகளின் வாழ்க்கை வரலாறும் பயன் தருகிறது என, காந்தி அடிகள் அமரத்துவமெய்திய 26 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு 30. 1. 74 இல் வெள்ளவத்தை சிவானந்த நிலையத்தில் நடைபெற்ற சர்வோதய விழாவிற்குத் தலைமை வகித்த அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக் கிளைத் தலைவர் திரு. ச. சோமசுந்தரம் கூறினார். அவர் மேலும் பேசுகையில், காந்தி சேவா சங்கம் காந்தி அடிகளின் தத்துவமான சர்வோதயத்தை மக்களிடையே பரப்பும் மகத்தான பணியை மேற் கொண்டுள்ளது. இதற்கு எல்லோரும் ஆதரவு நல்க வேண்டு மெனக் கோரினார்.

அடுத்தது வண. டி. ஆர். அம்பலவாணர் அவர்கள் உரையாற்றிய போது, ''காந்தியடிகள் இந்தியாவில் அவதரித்த போதிலும் அவர் உலகிற்கு உரித்தானவர். இன்று நாம் அவரையும் அவரது தத்துவங்களையும். மெதுவாக மறந்து வருகிறோம். இது வருந்துதற்குரியதாகும். கிறீஸ்து நாதரின் போதனைகளைச் சாதனையில் காட்டிய காந்தி அடிகளின் வாழ்வு சத்தியம், அகிம்சை ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டது. அவரது வாழ்வைப் பின் பற்றினால் நாம் எல்லோரும் சபீட்சம் அடையலாம்.'' எனக் கூறினார்.

தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் திரு. த' ஐயாத்துரை உரையாற்றுகையில், ''ஆண்டு தோறும் காந்தியடிகளை நினைவு கூர விழா எடுக்கிறோம். இது போதாது. அவரது தத்துவங்களைக் கடைப் பிடிக்க வேண்டும். அவரது வாழ்க்கை முழுவதையும் பின்பற்ற முடியா விட்டாலும் ஒரு சில வற்றையாவது பின் பற்ற வேண்டும். இதுவே அவருக்குச் செய்யும் சிறந்த அஞ்சலியாகும்'' எனக் குறிப்பிட்டார்.

கல்வி வெளியீட்டுத் திணைக் களத்தை சேர்ந்த செல்வி - கமலா - இராமுப்பிள்ளை பேசுகையில், ''நாயன்மார்களைப் போல், யோகிகளைப் போல் காந்தி அடிகள் அற்புதங்களை நிகழ்த்தவில்லை. எம்மைப்போலவே சாதாரண வாழ்க்கையை நடத்தினார். ஆனால், அவர் கடைப் பிடித்த சத்தியம், அகிம்சை அவரது வாழ்வைச் சிறப்பித்தது. இதை நாம் எல்லோரும் உணர்ந்து அவற்றை எமது வாழ்விலும் கடைப் பிடிக்க வேண்டும்'' எனக் கூறினார்.

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க பொதுச் செயலாளர் பேசுகையில், ''இன்று நாட்டிலுள்ள பஞ்சம் பற்றிப் பேசுகிறார்கள். காந்தி அடிகள் கூறிய சுய தேவைப் பூர்த்தித் தத்துவத்தை கடைப் பிடிப்போமேயானால் எங்கள் நாட்டில் பஞ்சம் ஏற்படாது. அன்று காந்தி அடிகள் கூறிய தத்துவங்களைப் புறக்கணித்தமையாலேயே நமக்கு இக்கதி ஏற்பட்டுள்ளது. இனியாவது அவரைப் பின்பற்ற முயல்வோமாக.'' எனக் குறிப்பிட்டார்

உதவிச் சட்ட வரைஞர் திரு. செ. சிறிக்கந்தராசா உரையாற்றிய போது ''சர்வோதயதத்துவத்தை முதன் முதலில் உலகிற்களித்தவர் கிறீஸ்து நாதர்' பிற்காலத்தில் இத்தத்துவம் காந்தி அடிகளின் வாழ்வில் இடம் பெற்று மேலும் உலகப் புகழைப் பெற்றுள்ளது. சட்டத்திற்கும் சர்வோதயத்திற்கும் முரண் பாடு இருந்த போதினும் அன்பு, அகிம்சை மூலம் சட்டத்தினால் பெறக் கூடிய ஒழுங்கைப் பெற்றுக் கொள்ள முடியுமென காந்தி அடிகள் நம்பினார் எனக் குறிப்பிட்டார்.

விழாவில், திருமதி. விஜயலட்சுமி சண்முகம்பிள்ளை அவர்களும் அவரது மாணவிகளும் பக்திப் பாடல்கள் பாடினார்கள்

2 ஆம் பக்க தொடர்ச்சி

''அரசாங்கச் செலவிலும் செட்டும் சிக்கனமும் வழிகாட்டும் நெறியாய் அமைய வேண்டும். கைலஞ்சமும் விரயமும் பெரும்பாதகம் என்பதை அரச ஊழியர் உணரவைக்க வேண்டும்.'' (1934 மாவோ)

''எங்கள் பலரிடை மிகப் பெரிய தீய பழக்கம் ஒன்று குடி கொண்டு விட்டது. பொதுமக்களின் இன்பதுன்பங்களில் பங்கு கொள்வதில் ஒருவெறுப்பும், தன் சொந்தப் புகழ் பலன் ஆகியவற்றில் பெரிய அக்கறையும் குடிகொண்டு விட்டது. இது மிகப் பெரும் தீய பழக்கம். இதற்கு எங்கள் அமைப்பை, உற்பத்தியைப் பெருக்கவும் செட்டினை வளர்க்கவும் கூடிய வகையில், எளிமைப் படுத்த வேண்டும். இதற்கு எங்கள் டணியாளரைக் குறைந்த படி நிலைக்கு மாற்றம் செய்ய வேண்டும். இதனால் பெருந்தொகையினர் உற்பத்தி வேலையில் ஈடுபடுவர்.'' (1957 மாவோ)

எங்கள் நாட்டில் இலங்கையில் நடப்பது என்ன? எல்லோரும் திட்டமிடுகிறார்கள் அறிவுரைகள் கூறுகின்றார்கள். மண்ணோடு கலந்து வேலை செய்யார்கள். ''படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோயில்'' என்பது போல் ''ஓதுவது சோஷலிசம் தூங்குவது கந்தோரில்'' என விளங்குகின்கிறார்கள்.

மேலே நாம் காட்டிய மாவோவின் கடைசிக் கூற்று என்ன சொல்கிறது? அரசியல் கட்சிகளிலும் சரி அலுவலகங்களிலும் சரி மக்கள் கீழ்ப்படி நிலைகளிலிருந்து மக்களோடு சேர்ந்து பணியாற்ற வேண்டும். அது தான் பொதுவுடைமை வாதம்; மக்கட்பணி; சர்வோதயம்.

— இ. இ.

4 ஆம் பக்கத் தொடர்ச்சி

பம்பலப்பிட்டி

திருக்குடும்பகன்னியர் மடம்

| | | |
|---|---|---|
| செல்வி. யசோதா- சுப்பிரமணியம் | 20 | 00 |
| '' குந்தவை- கதிர்காமநாதன் | 5 | 00 |
| '' யசோதா- தனபாலசிங்கம் | 10 | 00 |
| '' ராதா- அந்தோனிப்பிள்ளை | 10 | 00 |

மெல்போன் அவென்யூ

| | | |
|---|---|---|
| திருமதி. அம்பலவாணர் | 2 | 00 |
| '' செ. சின்னத்தம்பி | 4 | 00 |
| '' ந. பத்மநாதன் | 2 | 00 |

மாடி வீடுகள்

| | | |
|---|---|---|
| திரு. ஆர். நல்லதம்பி | 2 | 00 |
| '' சுப்பிரமணியம் | 12 | 00 |
| '' விநாயகமூர்த்தி | 2 | 00 |

டேவிட்சன் வீதி

| | | |
|---|---|---|
| திருமதி. பொ. காராளசிங்கம் | 5 | 00 |
| மொத்தம் | 414 | 50 |

# சம்பத்துத் தானம்

இரத்மலானை சர்வோதய நிகேதனத்தில் இருக்கும் மாணவர்களின் செலவுக்காக 1974 சனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்களில் சம்பத்துத்தானம் அளித்தவர்கள்.

| | | |
|---|---|---|
| இரத்மலானை | | |
| திரு. வி. சிங்காரம் | 1 | 75 |
| திருமதி. கே. சீவரத்தினம் | 3 | 00 |
| திரு. எஸ். கருணாநிதி | 2 | 00 |
| " வி. பெருமாள் | 1 | 00 |
| கல்கிசை | | |
| செல்வி. த. சிதம்பரநாதர் | 2 | 00 |
| தெகிவளை | | |
| இரத்தினகார இடம் | | |
| திருமதி. கா. சங்கரப்பிள்ளை | 2 | 00 |
| " க. க. சுப்பிரமணியம் | 2 | 00 |
| " எ. அமிர்தானந்தன் | 4 | 00 |
| " ம. கனகலிங்கம் | 6 | 00 |
| " எஸ். கனகசிங்கம் | 4 | 00 |
| " நா. இரத்தினசிங்கம் | 4 | 00 |
| " ஆர். சிதம்பரநாதர் | 2 | 00 |
| " வ. இரத்தினம் | 2 | 00 |
| மெல்பெட்கிறசென்ற் | | |
| திருமதி. ஆர். இம்மானுவெல் | 2 | 00 |
| வெள்ளவத்தை | | |
| காலி வீதி | | |
| திரு. வைத்தியலிங்கம் | 2 | 00 |
| " எஸ். பி. சோமசுந்தரம் | 2 | 00 |
| " சி. விவேகானந்தன் | 2 | 00 |
| " பொ அட்சரமூர்த்தி | 1 | 00 |
| " இராசசுந்தரம் | 2 | 00 |
| " குகதாசன் | 4 | 00 |
| 47 ஆவது ஒழுங்கை | | |
| திருமதி. தவமணி | 1 | 00 |
| " அருளம்பலம் | 2 | 00 |
| " மாணிக்கம் | 2 | 00 |
| " ச. தம்பிப்பிள்ளை | 10 | 00 |
| " இரத்தினசபாபதி | 3 | 00 |
| செல்வி. பொன்னுத்துரை | 2 | 00 |
| இராமகிருஷ்ணவீதி | | |
| செல்வி. மஞ்சுளா- மார்க்கண்டு | 2 | 00 |
| விவேகானந்த வீதி | | |
| திரு. எஸ். ஆறுமுகம் | 2 | 00 |
| " எஸ். இராசையா | 2 | 00 |
| " கே. பேரம்பலம் | 4 | 00 |
| " சுந்தரம்பிள்ளை | 1 | 50 |
| விவேகானந்த அவென்யூ | | |
| செல்வன் சஞ்சீவன்- சிவலிங்கம் | 10 | 00 |
| செல்வி. சாமேன் இன்ஞசிப்பிள்ளை | 1 | 00 |
| ஈ. எஸ். பெர்ணந்து மாவத்த | | |
| திரு. விசாகப்பெருமாள் | 1 | 00 |
| " எஸ். திருநாவுக்கரசு | 1 | 00 |
| திருமதி. என். கந்தசாமி | 7 | 00 |
| " எம். நேசதுரை | 4 | 00 |
| " நடராசா | 4 | 00 |
| " கனகசபை | 2 | 00 |
| " ஸி. பரராசசேகரம் | 3 | 50 |
| " குமாரசாமி | 8 | 00 |
| " குலசிங்கம் | 5 | 00 |
| 36 ஆவது ஒழுங்கை | | |
| திருமதி. வேலாயுதபிள்ளை | 1 | 00 |
| " நவரத்தினம் | 1 | 25 |
| உலகபௌத்த மத்தியஸ்த வீதி | | |
| திருமதி. சோ. விஸ்வநாதன் | 15 | 00 |
| " தேவகி- குமாரசாமி | 5 | 00 |
| வெவசற் பிளேஸ் | | |
| திருமதி. ம. குணதிலக்க | 2 | 00 |
| பெரேரா ஒழுங்கை | | |
| திருமதி. பி. நடராஜா | 15 | 00 |
| அலெக்சாந்திரா வீதி | | |
| திருமதி. ச. பரமேஸ்வரன் | 2 | 00 |
| " எஸ். கந்தையா | 5 | 00 |
| சாளிமென்ற் வீதி | | |
| திருமதி. ஏ. எஸ். நடராஜா | 10 | 00 |
| மெனிங்பிளேஸ் | | |
| திருமதி. இ. ஜெர்மையா | 2 | 00 |
| " நவரத்தினம் | 2 | 00 |
| " க. இராசலிங்கம் | 10 | 00 |
| ஹம்டன்லேன் | | |
| திருமதி. ம. பரஞ்சோதி | 2 | 00 |
| " ஜி. எஸ். பொன்னையா | 2 | 00 |
| 53 ஆவது ஒழுங்கை | | |
| திருமதி. ப. இராசமாணிக்கம் | 2 | 00 |
| பசல்ஸ் ஒழுங்கை | | |
| திருமதி. இராஜேஸ்வரிமுதலியார் | 1 | 00 |
| 55 ஆவது ஒழுங்கை | | |
| திருமதி. இ. சற்குணநாயகம் | 1 | 00 |
| சுயா வீதி | | |
| திருமதி. ப. இரத்தினசபாபதி | 1 | 50 |
| கல்யாணி வீதி | | |
| திருமதி. இ. இரத்தினம் | 6 | 00 |
| " திருநாவுக்கரசு | 1 | 00 |
| " ச. வே. கந்தசாமி | 2 | 00 |
| " சீவரத்தினம் | 4 | 00 |
| " எஸ். தணிகாசலம் | 2 | 00 |
| " தா. தனபாலசிங்கம் | 3 | 00 |
| " எம். கார்த்திகேசு | 2 | 00 |
| புகையிரத நிலைய வீதி | | |
| திரு. ஆ. குணநாயகம் | 4 | 00 |
| ஹரிச்சந்திர மாவத்த | | |
| திருமதி. ம. நடராசா | 2 | 00 |
| " இ குமாரசாமி | 4 | 00 |
| " த. மகாதேவன் | 2 | 00 |
| " ச. விக்னராஜா | 2 | 00 |
| " ம. கனகசபை | 2 | 00 |
| " ச. மாணிக்கவாசகர் | 2 | 00 |
| டபிள்யு. ஏ. சில்வா மாவத்த | | |
| திருமதி. தி. கந்தசாமி | 2 | 00 |
| " சொ. இராசநாயகம் | 5 | 00 |
| " தா. கணேந்திரநாதன் | 5 | 00 |

# வரவு செலவு

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக் கிளை சர்வேதய நிகேதனம் 1974[ சனவரி, பெப்ரவரி) வரவு- செலவு விபரம்

| வரவு | ரூ. | ச. |
|---|---|---|
| கையிருப்பு | 167 | 82 |
| சர்வோதய பாத்திரம் | 12 | 92 |
| சம்பத்துத்தானம் | 414 | 50 |
| காந்தீயம் | 30 | 20 |
| கோகுலம் (பால் விற்பனை) | 93 | 50 |
| கமம் | 12 | 20 |
| நானாவிதம் | 10 | 00 |
| மொத்தம் | 741 | 14 |

| செலவு | ரூ. | ச. |
|---|---|---|
| உணவு | 99 | 63 |
| பிரயாணம் | 31 | 20 |
| கோகுலம் | 75 | 55 |
| வெளிச்சம் | 2 | 65 |
| சலவை | 12 | 42 |
| சலூன் | 1 | 00 |
| சம்பளம், கைச்செலவு | 79 | 00 |
| உபகரணம் | 3 | 00 |
| கமம் | 13 | 30 |
| வயித்தியம் | | 25 |
| மாணவர் செலவு (படிப்பு) | 25 | 35 |
| ஏற்ற இறக்க | | 40 |
| தபால் | | 50 |
| காந்தீயம் | 10 | 00 |
| விழா | 29 | 00 |
| கையிருப்பு | 357 | 89 |
| மொத்தம் | 741 | 14 |

| | | |
|---|---|---|
| " பொ. குலசிங்கம் | 6 | 00 |
| செல்வி. தேவகி. செல்லப்பா | 4 | 00 |
| பாமன்கட ஒழுங்கை | | |
| திருமதி. ஹைமவதி. சோமசேகரம் | 20 | 00 |
| " ம. முத்துத்தம்பி | 4 | 00 |
| " ஸி. மணி | 1 | 00 |
| " செ காராளசிங்கம் | 5 | 00 |
| இராசவல்லி ஒழுங்கை | | |
| திருமதி. வேலாயுதபிள்ளை | 4 | 00 |
| 40 ஆவது ஒழுங்கை | | |
| செல்வன். விசாகன்- சண்முகநாதன் காமன் பிளேஸ் | 2 | 00 |
| திருமதி. க. இராசரத்தினம் | 20 | 00 |
| ஹாமஸ் அவென்யூ | | |
| திருமதி. தம்பிப்பிள்ளை | 10 | 00 |
| பாக் வீதி | | |
| திருமதி. ச. கிருஷ்ணராஜா | 6 | 00 |

[3ஆம் பக்கம் பார்க்க]

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.